1979 மார்ச் 15]

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, தனியார் பேருந்துகளை அரசு எடுத்துக்கொள்ளும்போது அவைகளிலே வேலைபார்த்த அந்த பணியாளர்களை அரசுப் பேருந்துகளில் பணியாளர்களாக அமர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பேருந்துகளில் பணியாற்றுகின்ற பணியாளர்களை, அந்தப் பேருந்துகளை அரசு எடுத்துக்கொள்கிற போது அரசுப் பேருந்திலே பணியாளர்களாக அமர்த்த வேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருக்கிறது. ஆனால் தனியார் பேருந்துகளிலே பணியாற்றுகின்ற பணியாளர்களில் ஏறத்தாழ 80 சதவீதம் பேர்கள் நிரந்தரப் பணியாளர்களாகக் கணக்கிலே காட்டப்படாமல் இருக்கிறார்கள். நாட்டுடைமையாக்குகின்ற போது அந்தக் கணக்கிலே அவர்களைப்பற்றிய ரிக்கார்டுகளே கூட இல்லாமல் போகிற காரணத்தால் அந்தத் தொழிலாளர்களின் நிலை பாதிக்கப்படுகிற காரணத்தால் ஏதாவது ஒரு ஆதாரம் கிடைத்தாலும் அந்த அடிப்படையிலே அவர்களுக்குப் பணி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

நெடுஞ்சாலைகளில் கதிர்களைக் கண்டுமுதல் செய்தல்

* வினா எண் 412—திரு. பி. காளியப்பன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :

(அ) தமிழக அரசிற்குச் சொந்தமான நெடுஞ்சாலைகளில் விவசாயிகள் அறுவடை செய்த கதிர்களைக் கண்டுமுதல் செய்வதனால் போக்குவரத்துக்கு இடையூறும் விபத்துக்களும் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கு ஏதும் மாற்றுத் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) இவ்விவகாரத்தால் பாதிக்கப்படுபவர்கள் ஏழை விவசாயிகள். ஆதலின் இதற்கு மாற்றுத் திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் தற்போது இல்லை,

திரு. ந. தனசேகரன் ; பேரவைத் தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான கேள்வி. பல்வேறு விபத்துக்கள் ஏற்பட்டு இன்றைய தினம் பலபேர்கள் மடிந்திருக்கிறார்கள். அந்த நிலையில் ஏழை விவசாயிகளைக் காப்பதற்காக இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் ஏழை விவசாயிகளுக்காக

ரோடு ஓரங்களிலே அதற்கான அமைப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் கதிர்களைப் போடுவதற்கு ஏற்ற அளவிற்கு நடவடிக்கையை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, வினாவிலே கேட்கப்பட்ட ஆலோசனையை ஏற்கவில்லை என்று சொல்லவில்லை, தற்போது பரிசீலனையில் இல்லை என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சாலையை நெற்களமாக பயன்படுத்துவதால் போக்குவரத்துக்கு இன்னல்கள் ஏற்படுகின்றன, அதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

(முற்பகல் 10-10)

அந்த ஏழை விவசாயிகளுக்கு, குறிப்பாக நிலம் அதிகம் இல்லாத பகுதியில் இருக்கும் ஏழை விவசாயிகளுக்குப் பொதுக் களம் அமைத்து அதன்மூலம் இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டால் இத்தகைய இன்னல்கள் குறைக்கப்படும் என்று அதைப் பற்றி விவசாயத்துறைகூடப் பரிசீலித்து வருகிறது.

திரு. ப. சந்திரன்; தலைவரவர்களே, குறிப்பாகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் இப்படிப்பட்ட விரைவுப் பேருந்துகள் செல்லும் சாலைகளிலேகூட கம்பு, சோளம், கேழ்வரகு போன்ற கதிர்களை அடிக்கின்ற காரணத்தால் அந்தத் தூள் வண்டிகளில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளின் தலையிலும், கண்களிலும் விழுகின்ற அளவிற்கு மிகுந்த குறை ஏற்படுகிறது. அந்தக் குறையைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; பேரவைத் தலைவரவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்தில் மட்டுமல்ல, குறிப்பாகத் திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலும் மிக அதிகமாக இப்படிப்பட்ட சிக்கல் இருந்துகொண்டு வருகிறது. இதை ஒரு சட்டத்தின்மூலம் நடைமுறைக்குக் கொண்டு வருவது என்பது இயலாத காரியம், காரணம், இதை நெடுஞ்சாலைகளில் என்ஃபோர்ஸ் பண்ணுவதில் சிக்கல்கள் இருக்கும். பஞ்சாயத்து மூலமாக, லோகல் பகுதிகளின் மூலமாக அறிவுரை கூறி அறிவுறுத்தி, விவசாயிகளுக்கு மாற்றுத் திட்டமாக பொதுக் களங்களை அமைத்துத் தந்தால் விவசாயிகள் இத்தகு தடைகளை நெடுஞ்சாலைகளில் ஏற்படுத்த மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

திரு. க. இரா. சின்னராசு: தலைவரவர்களே, நெடுஞ்சாலைகளில் அறுவடைக் காலங்களில் விவசாயிகள் நெல் மற்றும் ராகி போன்றவற்றை அறுவடை செய்து ரோடுகளிலே போட்டு

விடுவதால் நெடுஞ்சாலைகளில் செல்லும் லாரி, பஸ்களுக்கு மிகவும் இடைஞ்சலாக இருந்து அதனால் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே, நெடுஞ்சாலை ஓரங்களில் உள்ள புறம்போக்கு நிலங்களில் அரசுக் களங்களை அமைத்து விவசாயிகளுக்கு வேண்டிய வசதியைச் செய்து கொடுக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட வினாவிற்கு இதற்கான பதிலை நான் அளித்திருக்கிறேன். விவசாயத் துறையைப் போக்குவரத்துத் துறை கேட்டுக் கொண்டிருக்கிறது. விவசாய அமைச்சரவர்களும் விவசாயிகளின் நலன் கருதி இத்தகு திட்டத்தை ஆய்வு நடத்துவதாகக் கூறியிருக்கிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, விவசாயிகள் அறுவடை காலங்களில் அறுவடை செய்யும் பயிர்களை ரோடுகளில் போடுவதால் லாரி, பஸ்கள் செல்வதன்மூலம் ஒரு மணி நேரத்திலே அதை பூராவும் அடித்துவிடுகிறது. ஆகவே, அவர்களுக்கு அது நன்மையாக இருக்கும். இல்லையென்றால் மாடு வைத்து அடிக்க வேண்டியிருக்கும். இதனால் நெடுஞ்சாலைகளில் போக்குவரத்துப் பிரயாணிகளுக்குத் தூசி ஏற்படாது. இந்த முறையில் இதைத் தடுக்காமல் அரசு இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, விவசாயிகளைப் பொறுத்தவரையில் உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இந்த நெல்லைக் களத்திலே அடிக்க, அதற்காக உழைக்கத் தயங்குவார்கள் என்று நான் கருதவில்லை. மாறாக, வைக்கோல் போரைச் சாலைகளிலே போடுவதால் விரைந்து செல்லும் உந்துகள், வாகனங்கள் ஆகியவைகளின் சக்கரங்களில் மாட்டிக்கொண்டு சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, சாலைகளில் விபத்துக்களைத் தடுக்கும் முகத்தான் இந்த நடவடிக்கை அவசியம் எனத்தான் அரசு கருதுகின்றது.

திரு. மு. செல்வராஜ்: பேரவைத் தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இருந்தபொழுது ஏறக்குறைய பஞ்சாயத்து யூனியனுக்கு பத்து இடம், இருபது இடம் என்ற முறையில் பொதுவான களத்தை நிரந்தரமாக, சிமெண்ட் களத்தைக் கிராமங்களில் அமைத்துக் கொடுத்தார்கள். பிறகு அது கைவிடப்பட்டுவிட்டது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்ததைப் போன்று மீண்டும் அம்மாதிரி அமைத்தால்

இப்படிப்பட்ட சிக்கல்களைத் தீர்த்துவிட முடியுமென்று நான் கருதுகிறேன். அதற்கான முயற்சியிலே விவசாயத் துறையாவது அல்லது போக்குவரத்துத் துறையாவது ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, விவசாயத் துறை, போக்குவரத்துத் துறை மட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகின்ற நல்ல ஆலோசனையை அமல் செய்ய லோகல் அட்மினிஸ்ட்ரேஷன்—உள்ளாட்சித் துறையையும் இணைக்க வேண்டும். உள்ளாட்சித் துறையிடமும் விவசாயத் துறையிடமும் போக்குவரத்துத் துறை இதுபற்றிக்கூறி நடவடிக்கை எடுக்க முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. ர. ச. தங்கவேல் : பேரவைத் தலைவரவர்களே, பஞ்சாயத்து யூனியன் ரோடுகளில், சில விவசாயிகள் ரோட்டைக் குறுக்கே வெட்டி தண்ணீரைக் கொண்டு போகிறார்கள். அப்படி ரோடு ஓரத்திலே இருக்கும் வாய்க்கால்களைத் தூர்த்து, நெல் அடிக்கக் கொடுத்தால் திருப்தி அடைவார்கள். இதன்மேல் அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, விவசாயிகளின் நலன் கருதி அதற்குத் தடை ஏதும் அரசு விதிக்காது. ஆனால் தண்ணீரை சாலையின் ஒரு பகுதியிலிருந்து மறு பகுதிக்குக் கொண்டு செல்லும்பொழுது பழுதுபட்ட சாலையாக இருந்தால், பழுதடைந்த நிலையிலே இருந்தால் அவற்றைச் செப்பனிட வேண்டுமென அரசு உத்தரவிட்டிருக்கிறது.

கள்ளக்குறிச்சியில் மணிலா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை

*வினா எண் 413—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் ; மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெருவாரியாக மணிலா பயிரிடப்படும் தென் ஆற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் தொழில் இணையகத்தின் மூலம் ஒரு மணிலா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை துவங்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.